G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ 2024(2025)

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය

Model Paper

மாதிரி வினாத்தாள்

# History

# வரலாறு



**கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை 2024(2025) மாதிரி வினாத்தாள் I- II**

**கல்வி அமைச்சு மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு**

අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

33 | T | I

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2024 (2025)
**G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2024 (2025)**

ඉතිහාසය I
வரலாறு I
History I

ஒரு மணித்தியாலம்

## வரலாறு I

அறிவுறுத்தல்கள்:

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (ஒ) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. கீழே தரப்பட்டுள்ள மூலாதாரங்களுள் புகழ் காவிய வகைக்குள் உள்ளடங்கும் மூலாதாரம் எது?
   (1) சீத்தாவாக்க சட்டன (2) பெரகும்பா சிரித
   (3) நிகாய சங்கிரஹய (4) ராஜாவலிய

2. அக்கினி மற்றும் பர்ஜன் எனும் தெய்வங்களை பிரதிபலிக்கும் செதுக்கல் கலைப்படைப்பை காணக்கூடிய சமயக்கட்டிடம் எது?
   (1) அபயகிரி (2) ஜேதவனாராமய (3) மிகிந்தலை (4) இசுருமுனிய

3. இலங்கையின் பண்டைய கட்டடக்கலை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மூலாதார வகையாக அமைவது.
   (1) சிதைவுகள் (2) நாணயங்கள் (3) சாசனங்கள் (4) சித்திரங்கள்

4. **இண்டிகா** எனும் வெளிநாட்டு இலக்கிய மூலாதாரத்தை எழுதிய எழுத்தாளர் யார்?
   (1) அரிஸ்டோட்டில் (2) பிளினி
   (3) ரிபைரோ (4) மெகஸ்தனிஸ்

5. திஸ்ஸமகாராம குளத்தை நிர்மாணித்த ஆட்சியாளன் யார்?
   (1) இளநாகன் (2) தாதுனேன்
   (3) அபயநாகன் (4) வசபன்

6. கீழே தரப்பட்டுள்ள விடயங்களுள் துட்டகைமுனு மன்னனின் இராஜதந்திர செயற்பாட்டினை வெளிப்படுத்தும் விடயம் யாது?
   (1) இலங்கையை முதன் முறையாக ஐக்கியப்படுத்தியமை
   (2) ருவன்வெளி மகாதூபியை நிர்மாணித்தமை
   (3) 18 வைத்தியசாலைகளை அமைத்தமை
   (4) எல்லாளன் சமாதிக்கு உரிய மரியாதை செலுத்தியமை

7. பத்தினி கோவில் திறப்பு விழாவில் பங்கு கொள்வதற்காக தென்னிந்தியாவின் சேர இராச்சியத்திற்கு சென்ற இலங்கை ஆட்சியாளன்
(1) முதலாம் கஜபாகு
(2) பாதிகாபயன்
(3) ஆறாம் புவனேகபாகு
(4) வசபன்

8. கீழே நிரல் I இல் சில கல்வெட்டுக்களும் நிரல் II இல் அக்கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு பொருத்தமான வகையில் நிரல் II இனை தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையாக அமைவது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. முதுகல்ல கல்வெட்டு<br>2. மண்டகல கல்வெட்டு<br>3. வெஹரக்கம கல்வெட்டு | A. துலாதர சுமண<br>B. ததவய<br>C. மஜ்ஜிம எனும் கம்மாளர்<br>D. தடிக சுமண |

(1) ABC (2) ABD (3) CAB (4) CBD

9. பண்டைய காலத்தில் நடனக் கலைக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தும் மூலாதாரம் எது?

(1) மகாவம்சம்
(2) சமந்தபாசதிகாவ
(3) மெதகம விகாரைக் கல்வெட்டு
(4) நெட்டுக்கந்த கல்வெட்டு

10. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்களுள் ஒன்றான கில்துல்கல பெலிலென அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட கருங்கல் கட்டிடச் சிதைவின் மூலம் உறுதிப்படுத்தப்படுவது யாது?

(1) வரிச்சு வீடுகள் காணப்பட்டுள்ளமை
(2) குடிசை வீடுகளில் வாழ்ந்துள்ளமை
(3) செயற்கை கற்குகைகளை அமைத்து வாழ்ந்துள்ளமை
(4) வாழ்விடங்களை பொருத்தமான வகையில் மாற்றிக் கொண்டுள்ளமை

11. பண்டைய இலங்கையர் நீளம், தூரத்தை அளப்பதற்காக பயன்படுத்திய அலகுகள் இரண்டினை முறையே கொண்டுள்ள விடை

(1) யொதுன, கவ்வ
(2) பரமாணு, யொதுன
(3) அணு, தஜ்ஜாரி
(4) கவ்வ, தஜ்ஜாரி

- **கீழே A தொடக்கம் E வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து விளங்கி வினா இல 12,13 ஆகியவற்றிற்கு விடையளிக்குக.**

A. கொழும்பு அருங்காட்சியக கல்வெட்டொன்றில் கிரிகெரி என குறிப்பிடப்பட்டுள்ளமை
B. திலசங்குலிகா எனும் சிற்றூண்டி வகை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை
C. வீரங்குர எனும் விகாரைக்கு 500 தங்க கலங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளமை
D. பண்டைய காலத்தில் மூன்று போகங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை
E. களவு கொலை போன்ற குற்றங்களுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை

12. நான்காம் காசியப்ப மன்னனுடன் தொடர்புடைய இரு விடயங்களை உள்ளடக்கியுள்ள விடை யாது?

(1) AB (2) AC (3) BD (4) DE

13. தோணிகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரு விடயங்களை உள்ளடக்கியுள்ள விடை யாது?

(1) AC (2) BD (3) CD (4) DE

14. வாய்க்கால்களில் மீன் பிடிப்பதற்காக அரசினால் அறவிடப்பட்ட வரி எப்பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது?

(1) மதரமஞ்சக்க (2) போஜக்கபதி (3) கெதி அட (4) தக்கபதி

15. பண்டைய இப்பன்கட்டுவ மயானத்தில் கண்டெடுக்கப்பட்ட மாலையில் உள்ள சில மணிகள் எந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

(1) உரோம் (2) எகிப்து (3) இந்தியா (4) சீனா

16. அநுராதபுர இராச்சியத்தின் இறுதி ஆட்சியாளன் யார்?

(1) ஐந்தாம் காசியப்பன் (2) வசபன்
(3) இரண்டாம் சேனன் (4) ஐந்தாம் மகிந்தன்

17. கம்பளை இராசதானி தொடர்பில் பொருத்தமற்ற கூற்று எது?

(1) அரச குடும்பத்துடன் தொடர்புடைய இரு பிரபுத்துவ குடும்பங்கள் காணப்பட்டமை
(2) பிராந்திய ஆட்சி மையங்கள் சில காணப்பட்டமை
(3) சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு இடம்பெற்றமை
(4) இபின் பதூதாவின் இலங்கை வருகை இடம்பெற்றமை

18. கீழே தரப்பட்டுள்ளனவற்றுள் கோட்டை இராசதானிக் காலத்தில் எழுதப்பட்ட நூலாக அமைவது

(1) செலலிகினி சந்தேசய (2) ரசவாஹினி (3) சிதத் சங்கராவ (4) தலதாசிரித்த

19. இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் சிலரது பெயர்கள் நிரல் I இலும் அவர்களது ஆட்சிக்கால முக்கிய நிகழ்வுகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன அவ்விரு நிரல்களையும் மிகச்சரியாக தொடர்புபடுத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. முதலாம் விஜயபாகு<br>2. மூன்றாம் விஜயபாகு<br>3. ஆறாம் புவனேகபாகு | A. வன்னித் தலைவர்களின் கிளர்ச்சி<br>B. பாண்டிய அரசுடனான விவாகத் தொடர்பு<br>C. களனி விகாரை புனர்நிர்மாணம்<br>D. சிங்கள சங்கய எனும் கிளர்ச்சி |

(1) ABD (2) ACD (3) BCD (4) CAD

20. மலையக இராசதானியை கைப்பற்ற சீத்தாவாக்கை இராஜசிங்கனுக்கு உதவியவர்.

(1) வீரசுந்தர பண்டார (2) யமசிங்க பண்டார
(3) கரலியத்த பண்டார (4) ஜயவீர பண்டார

21. போர்த்துக்கேய தளபதியான பேரோலோபேஸ்த சூசா எப்போரின் போது கொல்லப்பட்டார்?

(1) முல்லேரியா (2) தந்துரே (3) பலன (4) கன்னொருவ

22. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்கள் அனைத்தும் சூரியனை நீள்வட்டபட பாதையில் சுற்றி வருவதாக கூறியவர் யார்?

(1) நிக்கலஸ் கொப்பனிகஸ் (2) கலிலியோ கலிலி
(3) ஜொஹென்ஸ் கெப்லர் (4) ஜொஹென்னஸ் கூட்டன்பேர்க்

- கீழே தரப்பட்டுள்ள A,B கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு வினா இல 23 இற்கு விடை தருக
  A. கள்ளிக்கோட்டை சமோரினிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொண்டமை
  B. நன்கொடை உறுதிப்பத்திரத்தின் மூலம் அரசுரிமையை போர்த்துக்கேயருக்கு கையளித்தமை

23. கோட்டை தர்மபால மன்னன் தொடர்பில்,
(1) A,B கூற்றுக்கள் உண்மையானவை (2) A,B கூற்றுக்கள் உண்மையற்றவை
(3) A உண்மையானது B உண்மையற்றது (4) A உண்மையற்றது B உண்மையானது.

24. கி.பி 18 ஆம் நூற்றாண்டின் போது வர்த்தக நடவடிக்கைகளில் முன்னணி வகித்த ஐரோப்பிய நாடு எது?

(1) பிரித்தானியா (2) பிரான்ஸ் (3) போர்த்துக்கல் (4) ஸ்பானியா

25. கீழே A – D வரை தரப்பட்டுள்ள நிர்மாணங்களுள் கைத்தொழிற் புரட்சி காலப்பகுதியில் இரும்புருக்கு கைத்தொழிலுடன் தொடர்புடைய நிர்மாணங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை யாது?
A. மியூல் இயந்திரம் C. திறந்த இரும்பு உலை
B. ரோலர் இயந்திரம் D. நீராவி இயந்திரம்
(1) AB (2) AC (3) BC (4) CD

26. ஆசியாவில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கிய அரசி யார்?

(1) முதலாம் விக்டோரியா மகாராணி (2) இரண்டாம் விக்டோரியா மகாராணி
(3) முதலாம் எலிசபெத் மகாராணி (4) இரண்டாம் எலிசபெத் மகாராணி

27. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட சென்னை ஆட்சி முறையின் கீழ் ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையிலான தொடர்புகள் விலகிச்சென்றமையில் தாக்கம் செலுத்திய காரணியாக அமைவது.

(1) கண்டியும் கரையோரமும் வெவ்வேறாக நிர்வகிக்கப்பட்டமை
(2) நிர்வாக நடவடிக்கைகளுக்காக சென்னை அதிகாரிகள் வரவழைக்கப்பட்டமை
(3) பிரித்தானிய அரசின் பிரதிநிதியாக ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டமை
(4) பிரித்தானியருக்கு எதிராக கரையோர மக்கள் கிளர்ச்சி செய்தமை

28. கி.பி 1818 கண்டி பிரகடனம் தொடர்பில் சரியான கூற்று எது?

(1) ஆளுநர் தோமஸ் மெயிட்லன்டின் காலத்தில் வெளியிடப்பட்டது.
(2) இது கண்டி ஒப்பந்தம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.
(3) கண்டி பிரதேசத்திற்கு வதிவிடப்பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டமை
(4) கண்டி பிரதானிகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை

29. **லங்காபிநவ விஷ்ரத** அச்சகம் பின்வருவோருள் யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

(1) மிஷனரிமார் (2) பௌத்தர்
(3) இந்துக்கள் (4) இஸ்லாமியர்

30. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடைய நபர் யார்?
A. பகிரங்க சொற்பொழிவுகளை நிகழ்த்தி புதிய சிந்தனைகளை முன்வைத்தமை
B. மகாபோதி சஞ்சிகைக்கு கட்டுரைகள் எழுதியமை
C. பௌத்த பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக விளங்கியமை

(1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் (2) பியதாஸ சிறிசேன
(3) வலிசிங்ஹ ஹரிச்சந்திர (4) அநகாரிக்க தர்மபால

31. சட்டவாக்க சபைக்கு முதன் முறையாக வாக்குரிமை மூலமாக பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கிய யாப்பு சீர்திருத்தம் எது?

(1) கோல்புறூக் (2) குறூ மக்கலம்
(3) மனிங் டெவன்சியர் (4) டொனமூர்

32. பின்வரும் இந்திய சுதந்திரப் போராட்ட தலைவர்களுள் இலங்கைக்கு வருகை தந்து மக்கள் மத்தியில் உரையாற்றிய தலைவர் யார்?

(1) ஜவகர்லால் நேரு (2) சுரேந்திரநாத் பனர்ஜி
(3) பாலகங்காதர திலகர் (4) பிபின் சந்திரபோல்

33. ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு முதன் முறையாக இலங்கையில் கறுவா மற்றும் மிளகு ஆகியவற்றை பயிரிட்டவர்கள் யாவர்?

(1) இலங்கையர் (2) போர்த்துக்கேயர்
(3) ஒல்லாந்தர் (4) ஆங்கிலேயர்

34. மாத்தளை பிரதேசத்தில் மாத்திரம் வெற்றியளித்தமை, நிழலை வழங்குவதற்கு மேலதிக செலவு ஏற்பட்டமை போன்ற விடயங்கள் காரணமாக தோல்வியடைந்த பயிர்ச்செய்கை எது?

(1) சிங்கோனா (2) தேயிலை (3) இறப்பர் (4) கொக்கோ

35. அரிசி விலையேற்றம் காரணமாக இடதுசாரி கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தாலின் விளைவாக பதவி விலகிய இலங்கைப் பிரதமர் யார்?
(1) டீ. எஸ். சேனாநாயக்க (2) டட்லி சேனாநாயக்க
(3) ஜோன் கொத்தலாவல (4) எஸ்.டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க

36. கீழே தரப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களுள் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் முதற்கட்டத்தினூடாக நீரைப் பெற்றுக்கொண்ட குளம் எது?

(1) பராக்கிரம சமுத்திரம் (2) கந்தளாய் குளம்
(3) மின்னேரியா குளம் (4) நுவர வாவி

37. இலங்கையின் முதலாவது கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்பட்ட இடம் எது?
(1) இரத்மலானை (2) ஏக்கல (3) கொக்கல (4) பியகம

- **கீழே ABCD என கருத்துச் சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒன்றில் தரப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் கருத்துக்களுக்கிடையேயான தொடர்பினைப் பரிசீலனை செய்து 38 – 40 வரையான வினாக்களுக்கு விடை தருக**

A – 1 - பிரான்சிய புரட்சி
2 - பொஸ்டன் தேநீர் விருந்து

B - 1 - சீனிச் சட்டம்
2 - இரகசிய வர்த்தகத்தை தடை செய்தல்

C – 1 - நில உரிமை பிரபுக்களுடையது
2 - மானிய முறை சமூகம்

D - 1 – உலக சமாதானத்தை பாதுகாத்தல்
2 – சர்வதேச சங்கம்

38. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையே தொடர்பின்மையைக் காட்டும் சோடி

(1) A (2) B (3) C (4) D

39. இரண்டாவதன் பண்பொன்றாக முதலாவது அமையும் சோடி

(1) A (2) B (3) C (4) D

40. இரண்டாவதனை நோக்காக கொண்டு முதலாவது நடைமுறைப்படுத்தப்பட்டதை குறிக்கும் சோடி

(1) A (2) B (3) C (4) D

*****

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 33 | T | II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2024 (2025)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2024 (2025)

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**வரலாறு II** **நேரம்: 3 மணித்தியாலம்**

- பகுதி – I இல் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி – II இல் நான்கு வினாக்களுக்கும், பகுதி III இல் ஒரு வினாவிற்கும் விடையளிக்குக
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

1 (அ)

i. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
**களுகங்கை, பதவியா குளம், கொத்மலை நீர்த்தேக்கம், கோட்டை, இப்பன் கட்டுவ, யாழ்ப்பாணம், கொடவாய, கற்பிட்டி, சீகிரியா, பண்டுவஸ்நுவர, மாணிக்க கங்கை, கோணேஸ்வரம்**
(12 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
**சுமாத்திரா தீவு, செங்கடல், ஜெனோவா, கள்ளிக்கோட்டை, ஸ்பானியா, ஹிரோசிமா**

(ஆ)

i. கீழே ABCD எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.
A. பௌத்த இராச்சியம் பற்றிய விபரம் எனும் தேச சஞ்சார அறிக்கையின் நூலாசிரியர் யார்?
B. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரருக்கு சங்கராஜ பதவியை வழங்கியவர் யார்?
C. கைத்தொழிற் புரட்சியின்போது செம்மறியாடுகளின் இனப்பெருக்கம் தொடர்பிலான புதிய கண்டுபிடிப்பினை மேற்கொண்டவர் யார்?
D. இலங்கையின் முதலாவது மகாவலி அபிவிருத்தி அமைச்சர் யார்? (4 புள்ளிகள்)

- A , B ஆகிய எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.
1. உரு A இல் காட்டப்பட்டுள்ள நபர் யார்?
2. இவர் எவ்வினத்தை சார்ந்தவர்?
3. இவர் வாழ்ந்த நாடு எது?
4. இவரால் எழுதப்பட்ட நூல் ஒன்றினைக் குறிப்பிடுக.



உரு A

(4 புள்ளிகள்)

iii.
1. உரு B இல் காட்டப்பட்டுள்ள உபகரணம் யாது?
2. இது எக்கைத்தொழிலுடன் தொடர்புடையது?
3. இதன் பயன்பாடு யாது?
4. இதன் கண்டுபிடிப்பாளர் யார்? (4 புள்ளிகள்)



உரு B

## பகுதி II

2 (i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தென்மாகாணத்தின் அரைவறல் வலயத்திற்குட்பட்ட கரையோர வெட்டவெளி பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் மரணச்சடங்கு முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) முன் வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட முறையான மரணச் சடங்கு சார்ந்த மயான வகைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

3 (i) பண்டைய இலங்கையில் எண்ணக்கருக்களாக வளர்ச்சியுற்ற அரசு பற்றிய கொள்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

(ii) பண்டைய கால மக்கள் குளத்தொகுதி ஒன்றினை உருவாக்கியதன் நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

(iii) வசப மன்னனின் ஆட்சிக்கால முக்கியத்துவத்தினை இரு காரணிகளினூடாக விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) பண்டைய கால மக்கள் இனங்களுக்கிடையேயான இணக்கப்பாட்டுடன் வாழ்ந்தமை பற்றி மூன்று உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

4 (i) எலஹுரக் கால்வாயின் மூலம் போசிக்கப்படும் குளங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கீழே A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையினை முறையே எழுதிக்காட்டுக.

A. பால்மடு யாகம் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற பிரதேசம்
B. தெஹிகஹ அலகந்த பகுதியில் இரும்பு சூளை எரிவதற்கான வளி எதனூடாக பெறப்பட்டது
C. 21 பூக்கள் செதுக்கப்பட்ட ஒரு நெல் மணி அளவிலான தங்க நகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட இடம்
D. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் பிறப்பு நிகழ்ந்த இடத்தின் பண்டைய பெயர்
(4 புள்ளிகள்)

(iii) பண்டைய ஆட்சியாளர்கள் மக்களின் வைத்திய வசதிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) பண்டைய ஆட்சியாளர்கள் சட்டங்களை பிறப்பித்து நடைமுறைப்படுத்திய துறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு உதாரணங்களினூடாக விளக்குக (6 புள்ளிகள்)

5 (i) கி.பி 1215 இல் இடம்பெற்ற கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பிற்கு பின்னர் தோற்றம் பெற்ற பிராந்திய ஆட்சி மையங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

(iii) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்கால முக்கியத்துவத்தினை இரு காரணிகளினூடாக விளக்குக. (5 புள்ளிகள்)

(v) இரண்டாம் நகராக்க காலப்பகுதியின் பொருளாதார கோலத்தில் காணக்கூடிய பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

6 (i) கி.பி 1815 வரை இலங்கையின் கரையோர பிரதேசங்களில் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரித்தானிய ஆளுநர்கள் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) பிரித்தானியருக்கு திருகோணமலை துறைமுகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தமையில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்ட முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) கி.பி 1818 இல் பிரித்தானியருக்கு எதிராக ஏற்பட்ட முதலாம் சுதந்திரப் போராட்டத்திற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

7 (i) பிரித்தானியரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கோல்புறூக் அரசியல் யாப்பினூடாக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் இரண்டினைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

(iii) பிரித்தானியர் ஆட்சியின் விளைவாக இலங்கையில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) சுதந்திரத்தின் பின்னரான அபிவிருத்தி செயற்பாடுகளின் போது விவசாய அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

8 (i) மறுமலர்ச்சிக் காலத்தின் பிரசித்திப் பெற்ற சித்திரக்கலைஞர்கள் மூவரைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

(ii) மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) புதிய கடல்மார்க்கப் பாதைகளை தேடியறியும் ஐரோப்பியரின் பயணம் வெற்றியடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சியின் விளைவாக இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக கலாசார துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தலா ஒன்று வீதம் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

9 (i) ஆசிய ஆபிரிக்க பிராந்தியங்களில் குடியேற்றங்களை நிறுவிய ஐரோப்பிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) கீழே A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையினை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

A. சரஜிவோ நகரில் படுகொலை செய்யப்பட்ட ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசன்
B. வேர்செல்ஸ் உடன்படிக்கையின் மூலம் தண்டனை வழங்கப்பட்ட நாடு
C. முதலாம் உலகப்போருக்கு பின் ஜேர்மனியில் அமைக்கப்பட்ட கூட்டரசு
D. ஜேர்மனியின் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட பெயர்


**( வைமார், பிரான்சிஸ் பேடினனட், இரண்டாம் வில்லியம், இத்தாலி, ரிஸ்டாக், ஜேர்மனி)**

(4 புள்ளிகள்)

(iii) இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டால் தீர்க்கப்பட்ட மோதல்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)


N



*****

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ 2024(2025)

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය

Answer Sheet For the Model Paper

மாதிரி வினாத்தாளுக்கான விடைத்தாள்

# History

# வரலாறு




අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව


கல்வி அமைச்சு மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | **2** | 11 | **2** | 21 | **2** | 31 | **2** |
| 02 | **4** | 12 | **2** | 22 | **3** | 32 | **1** |
| 03 | **1** | 13 | **2** | 23 | **4** | 33 | **3** |
| 04 | **4** | 14 | **1** | 24 | **1** | 34 | **4** |
| 05 | **1** | 15 | **3** | 25 | **3** | 35 | **2** |
| 06 | **4** | 16 | **4** | 26 | **3** | 36 | **4** |
| 07 | **1** | 17 | **3** | 27 | **2** | 37 | **2** |
| 08 | **3** | 18 | **1** | 28 | **4** | 38 | **1** |
| 09 | **3** | 19 | **3** | 29 | **2** | 39 | **3** |
| 10 | **4** | 20 | **1** | 30 | **4** | 40 | **2** |

1. (அ) ( I )


யாழ்ப்பாணம்
N
பதவியா குளம்
கோணேஸ்வரம்
கற்பிட்டி
சீகிரியா
இப்பன்கட்டுவ
பண்டுவஸ்நுவர
கொத்மலை
நீர்த்தேக்கம்
கோட்டை
களு கங்கை
மாணிக்க கங்கை
கொடவாய

(ii)




01 (ஆ) i.

A. பாகியன் தேரர்
B. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
C. ரொபட் பெக்வெல்
D. காமிணி திஸாநாயக்க (4 புள்ளிகள்)

ii 1. குளோடியஸ் தொலமி
2. உரோம்
3. அலெக்ஸ்தாந்திரியா
4. பூகோள சாஸ்திர பிரவேசம்
5. (4 புள்ளிகள்)

iii 1. நூல் நூற்கும் ஜெனி இயந்திரம்
2. நெசவு
3. நூல் நூற்றல்
4. ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ்

(4 புள்ளிகள்)

## பகுதி - ii

02 i. மினிஹாகல்கந்த, பூந்தல, பதிராஜவெல (3 புள்ளிகள்)

ii. எலும்புக் கூடுகளை வளைத்துப் புதைத்தல், இறந்த உடலை குகைக்கு உள்ளே புதைத்தல்,
எலும்புக் கூடுகளை தோன்றியெடுத்து வர்ணம் பூசி குகைக்குள் புதைத்தல், மண்டையோட்டில்
துறுத்திக் கொண்டிருக்கும் பகுதிகளை உராய்ந்து மட்டப்படுத்தல் (4 புள்ளிகள்)

iii.

- கல்லறை மயானம் - இப்பன்கடுவ, கல்சொஹொான் மயானம், யடிகல் பொத்த
- களிமண் ஓடக்கல்லறை மயானம் - பெரகல, ஹல்துமுல்ல, ரஞ்சாமடம
- பரணி மயானம்

( இவை பற்றி உதாரணங்களுடன் விளக்கியிருத்தல் வேண்டும்.) (5 புள்ளிகள்)

iv.

- சிறிய குளங்களைக் கொண்ட குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டமை. (வாவிகாம….)
- தொழில்கள் அடிப்படையில் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றமை
- செயற்பாடுகள் அடிப்படையில் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றமை
- ஒரு கிராமம் மற்றைய கிராமத்திலிருந்து காடுகளால் பிரிக்கப்பட்டிருந்தமை.
- நகரம் புரம் என வேறுபடுத்தப்பட்டிருந்தமை

(6 புள்ளிகள்)

03 i. கடவுள், போதிசத்துவர், மலையின் அரசன், சக்கரவர்த்தி (3 புள்ளிகள்)

ii.

- மேட்டுப்பாங்கான நிலத்தில் அமைந்துள்ள குளம் மழை நீரால் நிரம்பும் போது வெளியேறும் மேலதிக நீரை தாழ்நிலப்பகுதியில் அமைந்துள்ள குளம் ஒன்றிற்கு திருப்பி நீரை பாதுகாத்தல்.
- இரு குளங்களுக்கு இடையில் உள்ள கால்வாயில் எந்நேரமும் நீரைப் பாய விடுவதன் மூலம் அதன் இரு பக்க நிலங்களினதும் ஈரத்தன்மையை பாதுகாத்தல். (4 புள்ளிகள்)

iii.

- மகா வாவிகளை நிர்மாணிக்க ஆரம்பித்தமை
- நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்து ஆட்சி நடாத்துதல்.
- விகாரைகளை புனரமைப்பு செய்தமை.
- முறையான வரி அறவீட்டை மேற்கொண்டமை (5 புள்ளிகள்)

iv.

- தென்னிந்திய தமிழர்கள், மெஸிடோனிய அயோனியர்கள், ஆப்கானிஸ்தான் பகுதியின் காம்போஜகர்கள் மலாக்கா குடாநாட்டின் ஜாவகர்கள் இலங்கையில் வாழ்ந்தமை
- பௌத்த சமய குருவாக தமிழர் ஒருவர் காணப்பட்டமை
- தமிழர் ஒருவருடன் திருமணமாகியிருந்த சிங்களப் பெண்
- அரச சபைகளில் தமிழ் அதிகாரிகள் இருந்தமை(4 ஆம் காசியப்ப மன்னனின் கல்வெட்டு)
- அநுராதபுரத்தில் தமிழர்கள் வாழ்ந்த வீதி
- அனைத்து மதத்தினரும் வழிபடும் சிவனொளிபாதமலை (**விளக்கம்**) (6 புள்ளிகள்)

04 i. கந்தளாய், மின்னேரியா கவுடுளு, கிரிதலை (3 புள்ளிகள்)

ii.

A. சப்பிரகமுவ மாகாணம் பல்லேபெத்த கல்பாய
B. ஊதுளைக்கருவி
C. ஜேத்தவனராமய
D. புங்ககாம (4 புள்ளிகள்)

iii.

- நாட்டின் சுகாதார சேவைக்கு மன்னர்கள் சேவையாற்றியுள்ளமை
- உதாரணம் பண்டுகாபயன், துட்டகைமுனு, நான்காம் காசியப்பன், முதலாம் உபதிஸ்ஸன், புத்ததாசன்)
- வைத்தியசாலைகள் கட்டப்பட்டமை சொத்திசாலா, பஸவந்தி நாமசால, திம்பிரிகே, உபசக்க ரோகநாச
- வைத்தியர்கள் வெஜ, வெதனா, மகாவெதனா
- சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை
- ஆலாஹன பிரிவெனா அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட வைத்தியசாலை
- உலோகக் கத்தரிக்கோல்
- வைத்திய நூல், மருத்துவ ஓடம், மூலிகைத் தோட்டம்
- கழிவகற்றும் முறைகள் (விளக்கம்) (5 புள்ளிகள்)

iv.

- சூழல் பாதுகாப்பு
  - மண், நீர் மரங்கள், விலங்கு தொடர்பான சட்டங்கள்
  - உதாரணம் - கொண்டவட்டவான் கல்வெட்டு, அநுராதபுர வெஸ்ஸகிரிய கல்வெட்டு
  - படுகொலைச்சட்டம் ஆமண்ட காமினி அபயன்
  - நான்காம் மகிந்தன் மிகிந்தலை சுவர் கல்வெட்டு
  - புத்தன்னேஹெல கல்வெட்டு
- வரிச்சட்டம்
  - குள நிர்வாகம் தொடர்பாக அறவிடப்பட்ட வரிகள்
  - விகாரை நிர்வாகம் தொடர்பாக மிகிந்தலை சுவர் கல்வெட்டு
- வர்த்தக சட்டங்கள்
  - கொடவாய கல்வெட்டு – துறைமுக வரி
  - வர்த்தக சட்டதிட்டங்கள் - ஹோபிட்டிகம கல்வெட்டு
  - 
- குற்றவியல் சட்டம்
  - வேவல்கெட்டிய கல்வெட்டு
  - நான்காம் மகிந்தனின் மிகிந்தலை கல்வெட்டு
    (இவற்றை உதாரணங்களுடன் விளக்கியிருத்தல் வேண்டும்)

(6 புள்ளிகள்)

05 i. யாப்பகுவ கோட்டை, கோவிந்த மலை கோட்டை, மினிப்பே கந்தெனிய
(3 புள்ளிகள்)

ii.

- பலவீனமான மன்னர்கள் ஆட்சி பீடம் ஏறியமை
- கலிங்க , பாண்டிய வம்சங்களுக்கிடையிலான அதிகார போட்டி
- பொருளாதார வீழ்ச்சி
- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு (4 புள்ளிகள்)

iii.

- கலிங்க மாகனை வெற்றிகொண்டமை
- சந்திரபானுவை வெற்றிகொண்டமை
- இலக்கிய வளர்ச்சிக்கு உதவியமை
- தேவபதிராஜ ஊடாக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியமை (விளக்கம்)

(5 புள்ளிகள்)

iv.

- குளங்கள் அமைக்காது விவசாயம் செய்தல்
- சேனைப்பயிர்ச்செய்கை
- நெற் செய்கை
- ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரம்
- வெளிநாட்டு வர்த்தம் (சீனா, எகிப்து, பாரசீகம், உரோம்)
- துறைமுகங்கள் வளர்ச்சியடைந்தமை (6 புள்ளிகள்)

06 i. பிரடரிக் நோர்த், தோமஸ் மெயிட்லன்ட், ரொபட் பிரௌன்றிக் (3 புள்ளிகள்)

ii.

- திருகோணமலைத் துறைமுகம் வங்காள விரிகுடாவை நோக்கி அமைந்திருந்தமை
- இந்தியாவின் கிழக்குக் கரையோரத்தில் ஆங்கிலேயரின் கடற்படைபலத்தைப் பாதுகாத்துக் கொள்ள இத்துறைமுகத்தின் அமைவிடம் முக்கியத்துவமாயிருத்தல்
- வடகிழக்குப் பருவக் காற்றுக் காலங்களில் கப்பல்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு

(4 புள்ளிகள்)

iii.

- கிழக்கிந்திய வர்த்தக கம்பனியின் ஆட்சி ( சென்னை ஆட்சி)
- இரட்டை ஆட்சி
- முடிக்குரிய ஆட்சி (5 புள்ளிகள்)

iv.

- சுதந்திரத்தை இழந்தமை, அரசன் இல்லாமை பற்றிய மனவேதனை
- சமய கலாசார பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை
- மலைநாட்டு பிரதானிகளுக்கு எற்பட்ட தாக்கம் (6 புள்ளிகள்)

07 i. கோல்புறூக், குறூ மக்கலம், மனிங், மனிங் டெவென்சியர், டொனமூர், சோல்பரி

(3 புள்ளிகள்)

ii.

- சட்டவாக்க சட்ட நிர்வாக கழகங்களை அமைத்தல்
- நாட்டை ஐந்து மாகாணங்களாக பிரித்தல்
- கட்டாய இராசசேவை முறையினை ஒழித்தல்
- அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை நீக்குதல்
- கண்டியையும் கரையோரத்தினையும் ஒன்றிணைத்தல். (4 புள்ளிகள்)

iii.

- படித்த மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றமை
- தென்னிந்திய தமிழர்கள் இலங்கை சமூகத்துடன் இணைந்தமை
- மேலைத்தேய கலாசாரம் பரவியமை
- ஆங்கில மொழிமூலமான மேலைத்தேய கல்விமுறை அறிமுகமானமை
- விடுமுறைகால விடுதிகள், இரவு களியாட்ட விடுதி முறைகள் அறிமுகமானமை
- மேலைத்தேய ஆடையணிகள் பழக்கவழக்கங்கள் உருவானமை

(5 புள்ளிகள்)

iv.

- விவசாய குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டமை
- மகாவலி அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை
- நெல்லுற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை

(6 புள்ளிகள்)

பகுதி III

08 i. லியானாடோ டாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ, ரபாயல், மெசெக்சியோ, பொட்டி செல்லி

(3 புள்ளிகள்)

ii.

- கொன்ஸ்தாந்திநோபில் நகர் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை
- வர்த்தக முன்னேற்றம் புதிய செல்வந்த வர்க்கத்தின் தோற்றம்
- அறிவு வளர்ச்சி
- சமய சீர்திருத்தம் (4 புள்ளிகள்)

iii.

- தேசிய அரசுகளின் அனுசரணை
- திசையறி கருவி, வடதுருவ நட்சத்திரமானி என்பன கண்டுபிடிக்கப்பட்டமை.
- ○ புவி கோள வடிவமானது என்பது அறியப்பட்டமை.
- ○ தொலமியின் உலகப் படம்

(5 புள்ளிகள்)

iv.

<u>அரசியல்</u>

- மன்னராட்சி வீழ்சியடைந்தமை
- அரசியல் யாப்பு சீர்த்திருத்தங்கள் அறிமுகமானமை
- பாராளுமன்ற ஆட்சி அறிமுகம்
- கட்சிகள் தோற்றம் பெற்றமை
- உரோமன் டச்சு சட்டம் அறிமுகமானமை
- நீதிமன்ற தொகுதி அறிமுகமானமை

**<u>பொருளாதாரம்</u>**

- வர்த்தகப் பொருளாதார முறை அறிமுகம்
- சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறை வீழ்ச்சி
- இலங்கையில் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார முறை அறிமுகம்
- பணப்புழக்கம் அறிமுகம்
- போக்குவரத்து, பெருந்தெருக்கள் அறிமுகம்
- வர்த்தக நகரங்களின் அறிமுகம்
- புதிய வழிகள் மூலம் பணம் சம்பாதிக்கும் மத்தியதர வர்க்கம் தோற்றம்

**<u>சமூகம்</u>**

- சமூகம் அறிவுத்துறையில் உயர்நிலையில் இருந்தது.
- மேற்கத்தேய சிந்தனைகள் இந்நாட்டில் பரவின
- ஐரோப்பிய சமய பிரிவுகள் இங்கு தோன்றின
- மேற்கு நாடுகளின் கல்வி முறை இங்கு அறிமுகமாகியது
- ஐரோப்பிய கட்டிடக்கலை இங்கு அறிமுகம்
- படித்த மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றமை
- தென்னிந்திய தமிழர்கள் இலங்கை சமூகத்துடன் இணைந்தமை

- மேலைத்தேய கலாசாரம் பரவியமை
- ஆங்கில மொழிமூலமான மேலைத்தேய கல்விமுறை அறிமுகமானமை
- விடுமுறைகால விடுதிகள், இரவு களியாட்ட விடுதி முறைகள் அறிமுகமானமை
- மேலைத்தேய ஆடையணிகள் பழக்கவழக்கங்கள் உருவானமை

(6 புள்ளிகள்)

09 i. பிரித்தானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து. பிரான்ஸ் (3 புள்ளிகள்)

ii.

A. பிரான்சிஸ் பேடினட்
B. ஜேர்மனி
C. வைமார்
D. ரிஷ்டாக் (4 புள்ளிகள்)

iii.

- ○ நேசநாடுகள் வெற்றி பெற்றமை
- ○ அச்சு நாடுகள் தோல்வியடைந்தமை
- ○ அதிகமான உயிர்கள், சொத்துக்கள் அழிவடைந்தமை
- ○ மில்லின் கணக்கான நாசி படைகள் கொல்லப்பட்டமை
- ○ அணுகுண்டு பாவனை
- ○ குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றமை (இலங்கை, இந்தியா)
- ○ முதலாளித்து, சமவுடமை முகாம்கள் தோற்றம் பெற்றமை
- ○ அணிசேரா நாடுகளின் அமைப்பு தோற்றம் பெற்றமை
- பனிப்போர்
- ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் (5 புள்ளிகள்)

iv.

- சுயெஸ் கால்வாய் நெருக்கடி
- வளைகுடா நெருக்கடி
- கியூபாவின் ஏவுகணை நெருக்கடி

(6 புள்ளிகள்)

*****